செ.வெ.எண்.201 நாள்:24.05.2021

**நடமாடும் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை வாகனங்கள்**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவலை தடுப்பதற்காகவும், புதிய தொற்றுக்கள் பரவாத வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தளர்வுகளற்ற முழு ஊரடங்கு அமல்படுத்தியுள்ளார்கள்.

அத்தியாவசிய பொருட்களான காய்கறி மற்றும் பழங்களை உள்ளாட்சி துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையினர் இணைந்து மூலமாக குடியிருப்பு பகுதிகளில் வாகனங்கள் மூலம் விற்பனை செய்யும் வகையில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்று (24.5.2021) அன்று மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் உதகையில் நடமாடும் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை வாகனங்கள் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. ரூபாய் 100 மற்றும் ரூபாய் 50 மதிப்பிலான காய்கறித் தொகுப்பு பைகள் உழவர் சந்தை விவசாயிகளால் தயாரிக்கப்பட்டு விநியோகம் தொடங்கப்பட்டது.

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், திட்ட அலுவலர் (மகளிர்த்திட்டம்), தோட்டக்கலை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை), நீலகிரி மாவட்டம் மற்றும் மாவட்ட அளவிலான அரசு அதிகாரிகள் பலரும் கலந்துக் கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் 240 வாகனங்கள் மூலமாக காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்.ஃ.குழுக்கள் - 19 வாகனங்கள்

உழவர் சந்தை - 24 வாகனங்கள்

மகளிர்த்திட்டம் - 59 வாகனங்கள்

நகராட்சி - 104 வாகனங்கள்

தனியார் வாகனங்கள் - 30

மொத்தம் - 240

இவ்வாகனங்கள் மூலம் நீலகிரி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்யப்படவுள்ளது.

காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்வதற்கான அனுமதி சீட்டினை அந்தந்த வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் காய்கறிகள் பெறுவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையினை கீழ்கண்ட எண்ணில் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்

நீலகிரி மாவட்ட தொலைபேசி உதவி எண் (Help Desk Number) - 04232449760

வட்டார வாரியான தொடர்பு அலுவலர்கள்

1. திருமதி.தி.கலைவாணி, வேளாண்மை அலுவலர், உதகை - 9944024021

2. திருமதி சுதா, வேளாண்மை அலுவலர், குன்னூர் - 8760017923

3.திரு.வெற்றிவேல், உதவி வேளாண்மை அலுவலர், கோத்தகிரி - 9787257280

4.திரு.லெட்சுமணன், வேளாண்மை அலுவலர், கூடலூர் - 9443482238

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.